# தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

திருவழிபாடு ஆண்டு **C**

**இன்றைய வாசகங்கள்:**

யோசுவா நூலிலிருந்து வாசகம் 5:9, 10-12,

திருப்பாடல்கள்: 34:1-6,

கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நூலிலிருந்து வாசகம் 5:17-21,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 15:1-3:11-32

## திருப்பலி முன்னுரை:

அழைக்கப்பட்டவர்களே,

தம் மக்கள் மீது அளவற்ற அன்பு கொண்டுள்ள ஆண்டவரின் பெயரால் இன்றைய திருப்பலிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்று நாம் தவக்காலத்தின் நான்காம் ஞாயிறை சிறப்பிக்கின்றோம். நமது மனமாற்றத்தின் வழியாக கடவுளுக்கு மகிழ்ச்சி அளிக்க இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. நாம் வழிதவறிய பிள்ளைகளாய் அலைந்து திரிந்தாலும், கடவுளின் அன்பை உணர்ந்து அவரிடம் திரும்பி வரும் நாளை அவர் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறார். கடவுளின் அன்பையும் பராமரிப்பையும் நாம் முழுமையாக புரிந்துகொள்ளும்போது, அவரது எல்லையற்ற இரக்கத்தில் மகிழ்ச்சி காண முடியும் என்பதை உணர நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் அன்பில் முழுமையாக நம்மை கரைத்துக்கொண்டு, அவரது விருந்துக்கு நம்மை தகுதியாக்கி கொள்ளும் வரம் வேண்டி, இத்திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**மனமாற்றம் தருபவராம் இறைவா,**

உமது திருச்சபையை மனமாற்றத்தின் பாதையில் வழிநடத்தும் ஆற்றல்மிகு திருத்தந்தையை எங்களுக்கு தந்து, அவருக்கு கீழ்ப்படிந்து வாழும் உள்ளத்தை இறைமக்கள் அனைவருக்கும் வழங்க வேண்டுமென்று உம்மைப் பணிந்து மன்றாடுகிறோம்.

**அனைவரையும் ஈர்ப்பவராம் இறைவா,**

உமது மாட்சிக்கும் திருவுளத்துக்கும் எதிராக பாவத்தில் வாழ்ந்து வரும் மக்கள் அனைவரும் மனந்திரும்பி, உம் அருள் இரக்கத்தை நாடி தேடும் வரமருள வேண்டுமென்று தாழ்மையுடன் உம்மை மன்றாடுகிறோம்.

**நல் ஆயனே! எம் இறைவா!**

இன்றைய உலகில் நிலவும் இளையோர்க்கு எதிராக எழுப்பப்படும் கலாசாரச் சீரகேடுகள், மாயகவர்ச்சிகள், பாலியல் வன்முறைகள் இவை அனைத்திலிருந்து எம் இளையோரைப் பாதுகாத்து உம் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றின் மறைபொருளை அறிந்து நற்செய்தியின் தூதுவர்களாக வாழ வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**கருணையின் தெய்வமே! எம் இறைவா!**

சமூகத்தில் தனக்கு யாருமே இல்லை என்று தனித்து விடப்பட்ட விதவைகள் அனாதைகள், கைவிடப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர் அனைவரும் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட உம் பாடுகளின் வழியாக அவர்கள் தங்களைப் புதுப்பித்த உம் இறை அருள் அவர்களுக்கு உதவிக்கரமாக அமைய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மன்னிப்பின் நாயகனே இறைவா,**

மனமாற்றம் என்னும் இனிய கொடைக்காக உமக்கு நன்றி கூறுகிறேன். ஒவ்வொரு முறையும் நான் பாவி என்று ஏற்று, உம்மிடம் திரும்பி வருகின்றபொழுது, வானகத் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாவதற்காக உம்மைப் போற்றுகிறேன். அந்த மன்னிப்பின், மனமாற்றத்தின் அனுபவத்தை எனக்கா எப்போதும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

**உமது மகன் இயேசுவில் நம்பிக்கைக் கொள்வோர் நிலைவாழ்வுப் பெறுவர் என்ற வாக்களித்த எம் இறைவா!**

எங்கள் நம்பிக்கை இறை இயேசுவில் நிலைப்பெற்று, எம் வாழ்வு ஏற்றம் பெறவும், அதனால் நாங்கள் உம் இறையரசின் சாட்சிகளாய் ஒளிர்ந்திடவும், அடுத்திருக்கும் எம் மக்களையும் இறையரசில் இணைத்திட உழைக்கவும் தேவையான ஞானத்தை அனைவருக்கும் வழங்கிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஆற்றல் வழங்கும் இறைவா,**

சோதனைகளை வெல்வதற்கு இயேசுவுக்கு வலிமை தந்தீரே, உம்மைப் போற்றுகிறோம். எங்களை சோதனையில் விழவிடாதேயும். சோதனை வேளைகளில் இயேசுவைப்போல இறைமொழி கொண்டு வெற்றி பெற இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.